முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1155

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.11.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அன்னதான சக்திமிகு தேசிகா வாழ்க
மாறுதலை புரிவேன் கலியில் என
மாதவசியாய் அவதாரம் எடுத்தருளுகின்ற
2. அருளுகின்ற குருராஜனே அப்பனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது தேள் திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 11 ம் நாள் 27.11.2022, ஞாயிற்றுக்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் சக்தி பெருக
தவராஜனுக்கு ஆறுமுகன் யானும்
மண்ணுலகில் நித்தம் நித்தம் ஆற்றலை
மகா சூட்சுமமாக வழங்கி வருகின்றேன்
4. வருகவே அரங்கன் தர்மம் பெருகப்பெருக
வையகம் ஞானலோகம் ஆகக்கூடும்
தருகின்ற அரங்கன் தொண்டர் படைகள்
தர்மத்தை வளர்க்க வளர்க்க இனிதே
5. இனிதே உலகோர் அவரவரும்
இணைந்து அரங்கன் சன்மார்க்கம் வழி
கனிவேலவன் என் தயவை பெற்று
கலியினில் ஞானிகளாக மாறக்கூடும்
6. கூடுகின்ற இந்த அற்புதத்தை குரு அரங்கன் எந்தன் சக்தியாக
நாடெங்கும் சரவண ஜோதி ஏற்றி ஞானம் வளர்த்து மக்களிடை ஆற்றல் கூட்ட
கூட்டவே அரங்கன் தொண்டர்களென
குவலயத்தில் எவரெல்லாம் அடையாளம் கொண்டிருக்கின்றாரோ
7. கொண்டிருக்கும் அன்பர்கள் அனைவருமே
குருபரன் என் அருள்பெற்று இனிதே
தொண்டுவழியே ஞானிகளாக மாறுவர்
தேசத்தைக்காக்கும் மகா சக்திகளாக தேறுவர்
8. தேறவே இந்த உலக மாற்றம்
தேசிகனைக்கொண்டு யானே நடத்துவேன்
மாறாது சுப்ரமண்யர் என் வாக்கு
மகத்துவம் சடுதி உலகம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–